476

(Aug'44) 476

தாரண ௵
ஆடி - ஆவணி ௴

ஸ்ரீ:

ஸம்புடம் - 3
ஸஞ்சிகை - 8

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

12 SEP 1944
MADRAS

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

"அஹோபிலே காருடசைலமத்யே க்ருபாவஶாத் கல்பிதஸந்நிதாநம் |
லக்ஷ்ம்யா ஸமாலிங்கிதவாமபாகம் லக்ஷ்மீந்ருஸிம்ஹம் ஶரணம் ப்ரபத்யே ||"

விஷய ஸூசிகை :—

1. ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம் 238
2. உண்மை வைணவன் 239
3. ஸ்ரீ தேஶிக வைபவம் 240
4. செய்திகள் 241
5. ஸம்பாதகரின் குறிப்புக்கள் 243

சந்தாதாரர்களுக்கு ஸம்பாதகரின் விஜ்ஞாபநம்

காகிதப் பஞ்சத்தை உத்தேசித்து ராஜாங்கத்தார், பத்ரிகைகளின் பரிமாணத்தைக் குறைக்கவேண்டுமென்று ஓர் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். அந்த உத்தரவு ப்ரகாரம் நமது ந்ருஸிம்ஹ ப்ரியையின் பரிமாணம் மாஸம் ஒன்றுக்கு எட்டுப் பக்கங்களுக்கு மேற்படாமல் இருக்கும்படி நேர்கின்றது. அந்தக் காரணத்தால் இந்த ஸஞ்சிகை முதலாக ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியை 8 பக்கங்கள் அடங்கியதாகவே ப்ரசுரம் செய்யப்படும். சந்தாதா[illegible]ரும் க்ருபையுடன் அதை அங்கீகரிக்கவேணும். லோகோபகாரகமாக [illegible] பத்ரிகைகளின் விஷயத்தில் இந்த உத்தரவைக் கொஞ்சம் தளர்த்திவிட [illegible]மாதிரி பத்ரிகைகளின் ஸம்பாதகர்களெல்லாரும் ராஜாங்கத்தாருக்கு [illegible]னுப்பியிருக்கிறார்கள். அது பகவத் கடாக்ஷத்தால் பலவத்தாக [illegible]தாநம் செய்யும் ஸ்வாமிகளால் அனுப்பப்படும் விஷயங்களும் [illegible] இருக்கிறபடியால் ஸங்க்ரஹிக்கப்பட்டே ப்ரசுரம் செய்யப்படும். [illegible] அந்த அம்சத்தில் கொஞ்சம் க்ஷமை பாராட்ட வேண்டுமென்று [illegible]ரும்.

JL
இ22ணா211, N41
N44·3·8.
21828.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்

[4-ஆம் அங்கம்]

[ஸ்ரீ. உப. அன்பில் வி. கோபாலாசார்ய ஸ்வாமி, M.A., B.L.,]
அட்வோகேட், திருச்சி]

[ஸம்புடம் 3, ஸஞ்சிகை 7, பக்கம் 210-ன் தொடர்ச்சி]

லோபன் :—என்னால் ஜயிக்கப்படாதவர் யார்? எனக்கு வசமாகாதவர் யார்? மனிதர் என் வசமாகி மண்ணுக்கும் பொருளுக்குமாகப் பெரும் கோரப் போர்கள் புரிகிறார்கள். 'குபேரைஶ்வர்யம்' என்பர். அது எனக்குத் தாஸ்யமே யாகும். ஐஶ்வர்ய மென்பது வெறும் பெயரே. உலகத்திலுள்ள தநமெல்லாம் அவன் பொக்கிஷத்தில் குவிந்துளது அவனுக்குத் 'தநத்தை வழங்குகிறவன்' என்று பெயர். அப்பெயர் விபரீத நாமம் த்யாக குணத்தில் ராமனுக்கு உவமையாக அந்த லோபி கூறப்பட்டிருக்கிறான். அவனே எனக்கு அடிமையான பரமலோபி. பணக் குவியலைக் காத்துக்கொண்டே அருகில் இருந்தால் அதில் ஆசை பெருகி அதைச் செலவிடவே கூடாதென்று லோப முண்டாகிவிடும்; கேள்.

"लब्धन्न मुञ्चति विलक्षमतिर्न भुंक्ते धत्ते पुनः पुनरसौ महतीं धनायाम् ।
निद्रारसन्न लभते महतान्निधीनां रक्षापिशाच इव संप्रति राजराजः ॥"

கையில் அகப்பட்ட த்ரவ்யத்தைக் கொஞ்சமேனும் விடமாட்டான். இவனுக்கு 'வீடு' எப்படிக் கிடைக்கும்? 'வீடுமின் முற்றவும்' என்னும் உபதேஶத்தை இவன் மதிப்பனோ? பிறருக்குக் கொடுக்க வேண்டாம்; தன் ஸுகத்திற்காகவாவது செலவிடுவனோ? மாட்டான். 'விலக்ஷமதி:'—கிடைத்த பொருளைக் கொண்டு ஆஶ்சர்யப்பட்டுக் கொண்டே இருப்பன்.

'अर्थस्य पुरुषो दासो दासस्त्वर्थो न कस्यचित् । इति सत्यं महाराज !'

என்றார் பீஷ்மர் யுதிஷ்டிரரிடம். 'தன் பணத்திற்குத் தான் அடிமையேயல்லது தனக்குத் தன் பணம் அடிமையன்று; இவன் பணத்திற்கு இவன் ஸ்வம்; இவன் பணம் இவனுக்கு ஸ்வம் அன்று' என்று பீஷ்மர் காட்டும் ரஸம். கிடைத்த பணக் குவியல்களைப் பார்த்து ஸந்தோஷத்துடன் இருப்பனோ? ஒருக்காலு மில்லை. மேலும் மேலும் பணப் பெருக்கில் ஆசைப்பட்டுக்கொண்டே அதே கவலையால் வருந்துவான். மேலே பணம் குவியக் குவிய அதற்கு மேல் ஆசையும் குவியும்.

"चिन्तामपरिमेयान्तां प्रलयान्तामुपाश्रिताः" "इदमस्तीदमपि मे भविष्यति पुनर्धनम्"

என்று கீதை. மோக்ஷரூபமான ப்ரஹ்ம ரஸ மிராவிடினும், எல்லா ப்ரஜைகளுக்கும் நித்ரா காலத்தில் திநம் திநம் அநுபவிக்கப்படுவதாகச் சொல்லப்படும் ப்ரஹ்ம ஸம்யோக ரஸம் உண்டோ? அதுவுமில்லை. 'ப்ரஹ்ம ரஸம் லபித்து ப்ரஹ்ம வித்துக்கள் அந்த ரஸ லாபத்தால் ஆநந்திப்பர்' என்னும் ஶ்ருதியை இங்கு 'ரஸம் ந லபதே' என்பது ஸூசிப்பிக்கின்றது. இவனுக்கு நித்ரா ப்ரஹ்ம ரஸமு மில்லை யென்று ரஸ வ்யஞ்ஜநம். இவனுக்கு நித்ராரஸமு மில்லை. மஹத்தான நிதிகளை இவன் இராக் காலத்தில் நித்ரையே இராமல் பூத ரக்ஷ: பிஶாசங்கள் போல காக்கும் காவல்காரன். பிஶாசங்களுக்குத் தூக்க முண்டோ? இவன் தநத்தில் இவனுக்கு ஸ்வாம்யமில்லை. 'மஹதாம் நிதீநாம்'—நித்ரா காலத்தில் ஜீவர்களைக் கட்டி அணைக்கும் ப்ரஹ்மத்தை 'ஹிரண்ய நிதி', 'ஸ்வர்ண நிதி' என்று நிதிக்கு ஶ்ருதி உவமையிட்டது. ப்ரஹ்ம மென்னும் நிரதிஶய ப்ருஹத்தான ஹிரண்ய நிதியிலும் மஹத்தான நிதிகள் இந்தத் தங்கக் குவியல்கள் என்று எண்ணி அந்த ப்ரஹ்ம நிதியைத் தள்ளி, அதனிலும் பெரிய நிதிகளாகத் தன் நிதிகளைக் கருதித் தூங்காமல் காக்கிறான். பெயர் ராஜராஜன். உண்மையில் பணத்தைக் காக்கும் பணப் பிசாசு. எனக்குத் தாஸன்.

த்ருஷ்ணை :—பொருளென்னும் புருஷார்த்தத்திற்கு மூவுலகும் அடிமைப்பட்டதே! புருஷார்த்தம்' என்பதற்கே 'புருஷன் ஆசைப் படுவது' என்பது பொருள். அந்த

வார்த்தையிலேயே 'அர்த்தம்' என்பது இருக்கின்றது. யார் தான் அர்த்த மென்னும் புருஷார்த்தத்தை விட முடியும்?

[லோபனும் த்ருஷ்ணையும் மற்றவர்களை நமஸ்கரிக்கிறார்கள். எல்லோரும் ஒருவரை ஒருவர் தழுவுகிறார்கள்.] இந்தக் குணங்கள் ஒன்றை யொன்று தழுவுகின்றன என்பது கருத்து. 'உங்கள் மூவர்களின் பத்னிகளான ரதி ஜிகாம்ஸை த்ருஷ்ணை இம்மூவர்களுக்கும் மங்கள்யக் குறைவே வராமல் இருக்கவேணும்' என்று வஸந்தன் ஆசீர்வதிக்கிறான். [க்ரோதனுடைய பத்நிக்கு 'ஜிகாம்ஸை' என்று பெயர். 'ஜிகாம்ஸை' என்பதற்குக் 'கொல்வதில் ஆசை' என்பது பொருள்.] தாத்பர்ய சந்த்ரிகையில், 'காண்டீவத்தைத் தர்மபுத்ரர் தூஷித்தபொழுது அர்ஜுநனுக்குக் கோபம் கிளம்பித் தர்மபுத்ரரைக் கொல்ல ஆசைப்பட்டு அதைச் செய்ய யத்நப்பட்டான்' என்று கோபத்தின் வ்யாபாரம் காட்டப்பட்டது.

"धिग्गाण्डीवं धिक्च ते बाहुवीर्यम्"

என்று கர்ண பர்வத்தில் தர்ம புத்ரர் வசநம். பிறரை ஹிம்ஸிக்க இச்சிப்பது கோபத்தின் கார்யம். க்ரோதன் லோபனை க்ஷேமம் விசாரிக்க லோபன் சொல்லுகிறான்: 'உன்னைத் துணையாகக் கொண்ட எனக்கு என்ன குறைவு?' மஹாபாரதம் என்னும் பெரிய இதிஹாஸம் துர்யோதநனுடைய கோபத்தையும், அதனால் கோபம் கிளம்பிப் பாரதப் போர் நடந்து ஜநங்கள் மடிந்ததையும் சொல்லுகிறது. அர்த்த புருஷார்த்தத்தை விடேனென்றதால் பாரதப் போர். மற்றொரு இதிஹாஸம் காம புருஷார்த்தத்தை விடேனென்றதால் வந்த ராமாயணத்தைச் சொல்லுகிறது. இதிஹாஸங்களெல்லாம் நம்முடைய ப்ரபாவத்தைத்தானே பேசுகின்றது! [தொடரும்.]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

12 SEP 1944 MADRAS

உண்மை வைணவன்

[ஸ்ரீ. உப. S. T. ஸ்ரீநிவாஸாசார்யர் M.A., L.T. வித்வான், திருவையாறு]

(ஸம்புடம் 3: ஸஞ்சிகை 7; பக்கம் 185-ன் தொடர்ச்சி)

மந்தாகினியின் தேகநிலை மிகவும் குலைந்தது. உடம்பெல்லாம் வெளுத்து அவள் அஸ்தி ப்ராயமாய் இருந்தாள். கருணாகரன் எவ்வளவு சொல்லியும் தேஹத்தில் உபேக்ஷையைக் குறைத்தாளில்லை. இருமல் ஆரம்பித்தது.

மாசிமாதம் படுத்த படுக்கையாய்ப் படுத்தாள். ஜ்வர வேகத்திலும் தானே கஞ்சி முதலியவற்றைத் தயாரித்துக் கொண்டாள். குயவன் குப்ப மென்னும் கிராமத்திலிருந்து கதிர்வேலு என்னும் வைத்யன் வந்து பார்த்தான். கருணாகரன் நிர்ப்பந்தமாக அவனை அழைத்து வந்தார். "உடம்பை ரொம்பக் கெடுத்துக்கிச்சுங்க. ஜன்னியிலே கொண்டு உட்டுட்டுதே!" என்றான். கருணாகரன் கலங்கினார். வேளை தவறாது கஞ்சி தயாரித்துத் தானே கொடுப்பர். வெகு தீநமான குரலில் கைகுவித்து "ஸ்வாமி! அடியேன் செய்த மஹாபாதகங்கள் போதாவோ? தேவரீருடைய பரிசர்யையும் பெற்றுக்கொண்டு அழியா நரகத்திற்கே போக வேண்டுமா? ஸ்வாமிந்! ஸ்வாமிந்!' என்று மன்றாடுவாள். புத்ரியிடம் உழலும் தாய்போலக் கருணாகரன் கலங்குவார். இரண்டு மூன்று தினங்கள் கண் திறவாத தாபஜ்வரம். கதிர்வேலு 'என்னால் முடியாது' என்று கைவிட்டுவிட்டான். அன்றிரவு மந்தாகினி கண் திறந்தாள். கருணாகரனைத் தன் பக்கலில் உட்காரச் சொன்னாள். தலையில் கரங் குவித்தாள். "ஸ்வாமி நான் எங்கே போனாலும் தேவரீரையும் ஸ்ரிய: பதியையும் மறவாதிருக்க அருள வேண்டும்" என்றாள், கருணாகரன் வருத்தத்துடன் "மந்தா! இதென்னபேதமை! நீ எங்கேயும் போகவில்லை; பேசாமலிரு." என்றார். பிறகு மயக்கம் போல் தூக்கம் வந்தது. தூங்கினாள். அர்த்த ராத்திரியில் கண் விழித்தாள். கருணாகரன் சற்று விலகி உட்கார்ந்திருப்பதைப் பார்த்தாள்.

"ஸ்வாமி—(இருமல்) ஸ்வா ஆமி—(இருமல்). இங்கேயா இன்னும் இருக்கிறீர்கள்?"

கருணா:—ஆமாம் மந்தா. மந்தா:-(தலையைத் தூக்க முயன்று முடியாமல்) "ஸ்வாமி அடியேனது வாழ்விற்குப் பேரொளி தேவரீர். என் உயிர் தந்தளித்தவர் தேவரீர். தேவரீரே அடியேனது ஆத்ம பந்து. அதற்கு அடையாளமாய்த் தேவரீரது திருவடியை

அடியேன் சிரஸ்ஸில் சேர்த்தருள வேண்டும்'' என்று கை குவித்து அஞ்ஜலி செய்தாள். அவள் கண்களில் நீர் பெருகியது. "மந்தா இந்த எண்ணத்தை நீ கொண்டது நல்லதே- ஆயினும், உன்னை எந்த விதமாயும் நான் இப்பொழுது தொட எனக்கு அதிகார மில்லை. வருந்தாதே'' என்றார். மந்தாகினி கண்ணை மூடினாள். ஒரு நாழிகைக் கெல்லாம் பெரும் ச்வாஸம் ஆரம்பித்தது. வேகமாகப் படுக்கையிலிருந்து எழுந்திருக்க முயன்றாள். அயர்ந்து வீழுந்தாள்; ச்வாஸம் பலமாயிற்று. கருணாகரன் 'இனி ப்ரயோஜநமில்லை என்று உணர்ந்து கொண்டார். அவர் உள்ளம் கருணையால் கனிந்து உருகியது "குழந்தாய்! நீ இப்படி மரிக்கவோ நிர்மலன் ஸங்கல்பம்! என்ன ஸுகம் கண்டனை! என் கண்ணே! நீ பட்ட துயர் ஆர் படுவார்? நீ கண்ணனைக் காமுற்றதுபோல் யார் காமுற்றவர்! உயர்ந்த நிலைமையில் வந்து புருஷோத்தமனை வழிபட்டு ஸ்வரூப லாபம் பெற்ற நீ இப்படி அநாதையாய் மடியவோ! மந்தா மந்தா!'' என்று சொல்லிக்கொண்டே கண்ணை மூடினார். கருணாநிதியை அவளது ஆத்ம ஸ்வீகாரத்திற்காக மன்றாடினார். ப்ராணமங்களை முடித்துத் திரும்பிப் பார்த்தார். மந்தாவின் உயிர் பிரிந்திருந்தது. கருணாகரன் சற்று நேரம் ஒன்றும் தோன்றாமல் ஸ்தம்பித்து உலத்தையே மறந்திருந்தார்.

மந்தாவின் சரமக்ரியைகளுக்கு ஒருவரும் வர இசையவில்லை. கருணாகரனது குணங்களிலும் கூப்பாட்டிலும் ஈடுபட்ட சில லௌகிகரும் சில வைதிகர்களும் ஐந்தாறு குடும்பத்தவர் அவர் வேண்டுகோட்கு இணங்கி அங்கே வந்தனர். கருணாகரன் கண்ணீர் உகுத்த வண்ணம் தன் கையால் ஏரிக்கரைத் தீர்த்தத்தால் அவள் உடலை நீராட்டினார். திருமண் காப்பணிவித்தார். "மந்தா! வத்ஸே! பொறுமையின் களஞ்சியமே! பின்னிட்ட சடையானும் பிரமனும் இந்திரனும் துன்னிட்டுப் புகலரிய வைகுந்த நீள் வாசல் போதியோ!! போ! போ! உன்னுடைய வாழ்க்கையே ஸ்ரீவாஸுதேவனுக்கு ஓர் அநர்க்கமான திவ்யோபஹாரம்.'' என்று கதறினார். அன்று ஸாயங்காலம் மந்தாவின் உடல் மாயமாயது.

பல நாட்களாயின. சில வருஷங்களும் கடந்தன. ஒரு மாசிமாதம். நல்ல நிலவு. மாம்பலத்தில் ஒரு விவிக்தமான விடுதியில் கருணாகரன் நின்று வானை நோக்கிய வண்ணம் யோசிக்கிறார். அவர் கண்களில்—ஸ்வரூபலாபம் பெற்ற தங்யர்களில் ஒருவரான அவர் கண்களில்—உத்தமாச்ரமியாய் வீதராகரான அவர் கண்களில்—நீர் பெருகியது அவரை ஆராதித்துவந்த ஸ்ரீதராசார்'பர் என்னும் வக்கீலின் பெண்ணான பத்துவயதுள்ள பத்மினி "ஓம்மாச்சித் தாத்தா நீ ஏன் அழறே'' என்று கேட்டது. கருணாகரன் முதலில் மௌநமாயிருக்கப் பிறகு குழந்தை ரொம்ப பிடிவாதம் பண்ண "இப்படிப்பட்ட நிலவில் மந்தாகினி போய்விட்டாள்'' என்றார், குழந்தை "மந்தாகினி உங்க பொண்ணா'' என்றாள். "ஆமாம் என் பெண்'' என்றார் ஸ்வாமி. பத்மினி தன் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

[முற்றிற்று]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ தேசிக வைபவம்

[சிறுங்கட்டூர் ஸ்ரீ. உப. S. N. ஸ்ரீராமதேசிகாசார்ய ஸ்வாமி
S. V. O. இன்ஸ்டிட்யூட், திருப்பதி]

[ஸம்புடம் 3, ஸஞ்சிகை 7, பக்கம் 228-ன் தொடர்ச்சி]

காஞ்சி க்ஷேத்ரத்தில் மத ப்ரவசநம் செய்துகொண்டு ஆசார்யன் வஸித்துவரும்போது, மாயாவாதி ஸந்யாஸி ஒருவர் இவரிடம் வாதத்திற்கு வர, நம் ஸ்வாமி அவரை வாதத்தில் தோற்கடித்தார். பிறகு மாயாவியான அந்த ஸந்யாஸியும் ஒரு தடாகத்திற்குச் சென்று அதிலுள்ள ஜலத்தையெல்லாம் குடிக்க, அதெல்லாம் தேசிகமணியின் வயிற்றில் சேர்ந்து பாதையை விளக்க, 'இது ஒரு க்ஷுத்ரம்' என்று உணர்ந்து, ஸமீபத்திலிருந்த ஒரு ஸ்தம்பத்தைக் கீற, அதிலிருந்து அந்த ஜலமெல்லாம் வெளிக்கிளம்ப, அதற்குள்ளாக அந்த ஸந்யாஸி ஸந்தோஷத்துடன் வந்து பார்க்க, கம்பத்தின் வழியாக ஜலமெல்லாம் பெருகுவதைக் கண்டு மிகவும் அடங்கிப்போய் இவரிடம் அபசார க்ஷாபணம் செய்துகொண்டார்.

கோயிலிலே சிஷ்ய வர்க்கத்திற்கு ஸத்ஸம்ப்ரதாயார்த்தங்களை உபதேசித்துக்கொண்டு தூப்புல் பிள்ளை எழுந்தருளியிருக்க, மஹா சதுரனை ஒரு சில்பி இவரிடம் வந்து, 'நீர் எல்லாக் கலைகளிலும் வல்லமையுடையவராயிருந்தால் என்னை ஜெயிக்கவேணும்' என்று சொல்ல, நம் தேசிகனும், 'நீ குறிப்பிடும் விக்ரஹத்தை நான் செய்கிறேன்; அதற்கு நீ பீடம் செய்து சேர்' என்று சொல்ல, அவனும், 'உம்முடைய விக்ரஹத்தையே நீர் செய்யும்' என்று சொல்ல, நம் ஸ்வாமியும் அப்படியே இசைந்து ரங்கநாதன் நியமநப்படி ஜ்ஞாந முத்ரை ஸ்ரீ கோசம் இவைகளுடன் தம்முடைய பிம்பத்தைச் செய்து முடிக்க, அந்த சில்பியும் பீடம் செய்து சேர்க்கப் பொருந்தாமையால் வெட்கங்கொண்டு அவனும் இவரிடம் அபசார க்ஷாபணம் செய்துகொண்டான்.

இவ்வாறு ஸகல ஶாஸ்த்ரங்களில் மாத்ரமின்றி, லௌகிக காரியங்களிலும் ஸ்வாமி தேசிகனுக்குள்ள ஸாமர்த்யத்தைக் கண்ட ஸ்ரீ ரங்கநாச்சியாரும் இவரிடம் ப்ரீதியாய் ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரர் என்னும் நாமத்தை இவருக்குச் சாத்தினுள் என்று பெரியோர்கள் சொல்வர். ப்ரதிவாதி பயங்கரம் அண்ணனும் இவ்வர்த்தத்தை "**तत्सहधर्मिणीकृपात्ताखिलतन्त्रस्वातन्त्र्य**" என்னுமிடத்தில் ஸாதிக்கிறுர்.

நம் தேசிக ரத்நமும் ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதய நாடகத்தில் ஸர்வதந்த்ர ஸ்வதந்தர சப்த விவரண ரூபமான "**सर्वतन्त्रसंकटप्रशमनविशङ्कटमतिः**" என்னும் வாக்யத்தால் இதையே பேசுகிறுர். இப்படி மூன்ருவதான பெரிய பிராட்டியாருடைய கடாக்ஷமாகிற ஸம்பத்தும் நம் தேசிக வள்ளலிடம் குடிகொண்டிருக்கிறது என்பது முன் கூறின வ்ருத்தாந்தத்தால் ஸுஸ்பஷ்டம்.

இப்படி மூன்ருவதான ஸ்ரீ சப்தார்த்தத்திற்கு ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரமென்னும் பிருதம் கிடைத்துவிடுகிறபடியினுலன்றே இதர பிருதங்களைப் போல் இதைத் தனியாக இந்த ஸூத்ரத்தில் கூறவில்லை. முதல் ஸூத்ரத்தில் ஸ்ரீ சப்தார்த்தம் இதுவரை விரிவாக எடுத்துரைக்கப்பட்டது. [தொடரும்]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

2/10/28

செய்திகள்

(1)

பாதூர் அக்ரஹாரத்தில் ஸம்ப்ரோக்ஷண மஹோத்ஸவம்

ஸ்ரீ அழகிய சிங்கரின் க்ருபா விசேஷத்துக்குப் பாத்ரமான இந்த அக்ரஹாரத்தில் ஸ்ரீ அலர்மேல்மங்கா ஸமேத ஸ்ரீ பிரஸந்ந வெங்கடேசப் பெருமாள் ஸன்னிதி திவ்ய விமாநமானது ஜீர்ணோத்தாரணம் செய்யப்பட்டு ஸம்ப்ரோக்ஷண மஹோத்ஸவம் (3—7—44) தாரண ஞூ ஆனி மீ 20உ திங்கட்கிழமை நன்ருக நடந்தேறியது. ஷை மஹோத்ஸவத்திற்காக ஆனிமீ 16உ வியாழக்கிழமை தினம் ம்ருத் ஸங்க்ரஹணமும் உபக்ரமிக்கப்பட்டு, நான்கு தினங்களும் திவ்யப்ரபந்த வேதபாராயண க்ரந்த காலக்ஷேபங்கள் நடந்தேறின. அநேக வித்வான்கள் எழுந்தருளியிருந்தார்கள். பல உபந்யாஸங்கள் நடந்தன. கடைசி திநத்தில் வித்வத் ஸ்வாமிகளுக்கு யதோசிதம் ஸம்பாவனை செய்யப்பட்டது. இந்த ஸம்ப்ரோக்ஷண விஷயத்தில் பாதூர் ஸ்ரீ. உ. வே. விஜயராகவாசாரிய ஸ்வாமி ப்ரப்ருதிகளின் விசேஷமான பக்தி ஶ்ரத்தாதிகள் குறிப்பிடத்தக்கவை. ஷை ஆலயம் வைகாநஸ ஆகமத்தைச் சேர்ந்ததாகையால், இந்த ஸம்ப்ரோக்ஷணத்தை விசேஷ ப்ரீதியுடன் நடத்திவைத்த சொரப்பூர் வித்வான் வைகாநஸ திலக தேசிகபட்டாசார்ய ஸ்வாமி முதலியவர்களின் ஊக்கமும் வியக்கத்தக்கது.

வா. ஸ்ரீரங்காசாரியன்.

(2)

ஸ்ரீ அழகிய சிங்கரின் சுண்டப்பளைய (கோபாலபுர) மங்களாசாஸநம்.

ஸ்ரீ அழகிய சிங்கர், கோயமுத்தூரில் எழுந்தருளியிருக்கும் ஸமயத்தில் அவ்வூருக்குச் சமீபித்திருக்கும் சுண்டப்பாளைய அக்ரஹார வாஸியான ஸ்ரீ. அனந்தாசார்யரால் பிரார்த்திக்கப்பட்டு, சென்ற ஜூலைமீ 1வ சனிக்கிழமை ஸ்வாதி யன்று, தமது திருவாராதன। சிங்கவேழ்குன்ற வெம்பெருமானுடனும் அவனுடைய அநந்த பரிச்சதங்களோடும் மங்களாசாஸநத்துக்கு எழுந்தருளினர். அவ்வூர் வாஸியான திருமலை ஸ்ரீமான் அநந்தாசார்ய ஸ்வாமி முதலானோர், ஸ்ரீ. உ. வே. வித்வான் ஸ்ரீனிவாசார்ய ஸ்வாமியை முன்னிட்டு ஊருக்கு ஒரு மைலிருக்கும்போதே கையில் பூர்ண கும்பத்துடன் சத்ர சாமர முதலான பிருதுகளுடனும் வாத்ய கோஷ ஸ்வஸ்திவாசக பூர்வகமாக வந்தெதிர்கொண்டு அழைத்துச் சென்ருர். அன்றையதினம் அளவிறந்த பக்தி ஶ்ரத்தையுடன் அவர் அவ்வெம்பிரான் பெருமைக்குத் தக்கவாறு, பக்ஷ்ய போஜ்யாதிளுடன் அச்சிங்கப்பிரானை ஆராதித்தார்.

அநந்தரம் அன்று ஸாயங்காலம், ஸ்ரீ அழகிய சிங்கர் அவ்வூரில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் ஸ்ரீ ஆராவமுதனையும் கோமளவல்லித் தாயாரையும் திருவடி தொழுவதில் ஆஸ்தாதிசயத்தாலே, தாம் மங்களாசாஸனம் செய்ய எழுந்தருள, அப்பொழுது ஸன்னிதி தர்மகர்த்தர் ஸ்ரீமான் அனந்தாசார்ய ஸ்வாமி முதலானோர் திருப்பல்லக்கில் எழுந்தருளப் பண்ணி அருளப் பாடிட்டு, மாலை பரியட்டத்துடன் ஸ்ரீ ஶடாரியை ஸாதித்தார்கள். ஸ்ரீ அழகிய சிங்கரும், ஸந்நிதியுள்ளே சென்று, ஆபாத சூடம் எம்பெருமானைத் திருவடி பணிந்து எழுந்தருளியிருந்த, அர்ச்சகர் ஸ்ரீ அழகிய சிங்கருக்குத் தீர்த்தம் ப்ரஸாதம் திருமாலை பரியட்டம் 'ஸமர்ப்பிக்க ' தந்யோஸ்மி ' என்று அவக்ஙை ஸ்வீகரித்தருளினர். பின்பு கவிதார்க்கிக ஸிம்ஹத்தையும் இதர ஆழ்வார் ஆசார்யர்களையும் நம் யதிஸிம்ஹம் யதாந்யாயம் திருவடிபணிந்து தந்யரானுர்.

வாங்கல் வங்கீபுரம் ரங்காசார்யர்

---

(3)

ஸ்ரீ அண்ணுஸாமி ஐயங்கார் வித்வத் ஸபை

மன்னர்குடியில் ப்ரபல மிராசுதாரராகிய ஸ்ரீமான் R. ஸ்ரீநிவாஸ அய்யங்காரால் தம் தகப்பனர் பெயரால் **மதத்ரய வித்வத் ஸபை** ஒன்று ஆரம்பிக்கப் பெற்று ஸ்ரீ கோபாலன் தெப்போத்ஸவம் 9 நாட்களிலும் அதிவிமர்சையாய் நடைபெற்றது. மத த்ரயத்திலும் ப்ரஸித்த வித்வான்களின் சேர்க்கையானது கண்டவர் சிந்தை கவருவதாயிருந்தது. பிரதி திநமும் காலை மாலைகளில் பரீக்ஷைகளும் மாலையில் வித்வதுபந்யாஸங்களும் கேட்போர் செவிக்கின்பமாக நடைபெற்றன. முதல் 4 திநங்களில் விசிஷ்டாத்வைதிகளுக்கு மட்டில் வேதத்திலும் திவ்ய ப்ரபந்தத்திலும் பரீக்ஷையென்றும், மற்ற 5 திநங்களில் த்ரிமதஸ்த்த வித்வான்களும் வேதாந்த விசாரம் செய்யவேணும் என்றும் ஸபையின் வ்யவஸ்த்தை. அதன்படி க்ரமமாக அவை நடந்தன. இதற்கு அக்ராஸநாதிபதியாக ஸபாப்ரவர்த்தகரின் ஆசார்யனுகிய கோயில் கந்தாடை அப்பன் ஸ்வாமி எழுந்தருளி யிருந்து ஸபையை ஷி அழகாக நடத்தி வைத்தார். திருச்சி அட்வகேட் ஸ்ரீ. A. V. கோபாலாசார்ய ஸ்வாமி இந்த ஸபையைத் திறந்து வைத்து ஸபையின் ஆத்யந்த திநங்களில் கூட ஏள்ளியிருந்து ஸபையைப் பெருமைப் படுத்தினர். அது லௌகிக வைதிக ஸர்வருக்கும் ஸந்தோஷகரமாயிருந்தது விசிஷ்டாத்வைத மதத்தின் சார்பில் நம் ஸ்ரீ உப. புத்தங்கோட்டகம் வித்வான் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி பரீக்ஷாதிகாரியாக விளங்கினர். ஸபையின் பூர்த்தியன்று முதவில் பெருமாள் ஸம்பாவனையும், பிறகு ஸ்வாசார்யனுகிய அப்பன் ஸ்வாமி (அத்யக்ஷ ஸ்வாமி) ஸம்பாவனையும், அதற்குப் பிறகு மத த்ரய பரீக்ஷாதிகாரிகளுக்கும் ஸமமாக ஒரே ஸமயத்தில் ஸம்பாவனையும் நடந்தேறின பிறகு மற்ற வித்வான்களுக்கு யதார்ஹம் ஸம்பாவனை பண்ணப்பட்டது.

இந்த ஸபையை ப்ரதி ஸம்வத்ஸரமும் மன்னர்குடி ஸ்ரீ கோபாலன் தெப்போத்ஸவம் (ஆனி மீ) 9 நாட்களிலும் இன்னும் சிறப்பாக நடத்த வேண்டும் என்பதாக இந்த ஸபாப்ரவர்தகரின் நோக்கம். சுமார் ஐயாயிரம் ரூபாய் சொந்த த்ரவ்யத்தில் ஏகதேசத்தில் வித்வான்களுக்கு ஸமர்ப்பணம் செய்த இம்மஹானுடைய மஹத்தான மநோபாவத்தை அளவிடுவது கடலைச் சுட்டிக் காட்டுவது போன்றதே.

ஸ்ரீ மதுராந்தகம் தி. ஈ. வீரராகவாசாரியர்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

சென்ற ஆனி மீ 23௳ வியாழக்கிழமை திநம் ஸ்ரீ அழகிய சிங்கருடைய சாதுர்மாஸ்ய ஸங்கல்பம் கோயம்புத்தூருக்கு ஸமீபத்திலுள்ள சிங்க நல்லூரில் நடைபெற்றது.

இவ்வர்ஷத்திய சாதுர்மாஸ்ய ஸங்கல்பம்

அந்த ஸ்தல வாஸிகளான ஆஸ்திக சிரோமணிகள் அந்த ஸங்கல்ப மஹோத்ஸவத்தை ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் திருவுள்ளம் உகக்குமாறு நடத்திவைத்தார்க ளென்று நாம் கேள்விப்படுகின்றோம். அந்த ஊரில் வைஷ்ணவ ஸித்தாந்தத்தை அவலம்பித்துள்ள கீற்று ஊர்த்வ புண்ட்ரதாரிகள் அநேகம் பெயர்கள் இருக்கிறார்களாம். இவர்களுடைய முன்னோர்க ளெல்லாரும் பரம்பரையாக ஸ்ரீ ஸந்நிதி ஶிஷ்யர்களாம். ஸ்ரீ அழகிய சிங்கர் அவ்விடம் எழுந்தருளின பிறகு அவர்களில் நூறு பெயர்கள் ஸமாஶ்ரயணம் செய்துகொண்டார்களென்றும், இன்னும் அநேகம் பெயர்கள் இனிச் செய்து கொள்ளப்போகிறார்க ளென்றும் அறிகின்றோம். ஸ்தலமும் வாஸ ஸௌக்கியமாக இருக்கின்றதாம்; நீலகிரி மாதிரி சில ஸமயங்களில் குளிர்ந்த காற்றும் வீசுகின்றதாம். ஸ்நாநாதிகளுக்கு நல்ல தீர்த்த மடங்கிய வாபிகளும் இருக்கின்றனவாம்: அந்த இடம் ஸ்ரீ அழகிய சிங்கர் திருமேனிக்கு ஸௌகரமாக இருக்கின்றது என்பதைக் கேட்டு நாம் ஸந்தோஷிக்கிறோம்.

*   *   *   *

ஸர்வ வ்யாக்யாநாதிகரண விஷயமாக 6-வது ஸஞ்சிகையில் நாம் வெளியிட்டிருந்த ஶங்கைக்கும், ஸ்த்ரீ தர்ம விஷயமாக 7-வது ஸஞ்சிகையில் நாம் ப்ரஸ்தாவித்திருந்த விஷயத்திற்கும், மதுராந்தகம் ஸ்ரீ. உப. வித்வான் வீரராகவாசார்ய ஸ்வாமி பரிஹாரத்தை அநுக்ரஹித்து லேகமொன்றை அனுப்பியிருக்கிறார். தேவனார்விளாகம் ஸ்ரீ. உப ஸ்ரீநிவாஸ தேஶிகாசார்ய ஸ்வாமியும் ஏற்கெனவே தாம் அநுக்ரஹித்திருந்த பரிஹாரத்தின் தொடர்ச்சியாக ஒரு ஸமாதானத்தை அநுக்ரஹித்திருக்கிறார். ஸஞ்சிகையில் அவகாஶ மிராததால் அவைகளை ப்ரசுரம் செய்யக் கூடவில்லை. ஸர்வ வ்யாக்யாநாதிகரணத்தில் ஸ்ரீ ஶ்ருத ப்ரகாஶிகாசார்யரால் அநுக்ரஹிக்கப்பட்டுள்ள திருவுள்ளமே ஸ்ரீ அதிகரண ஸாராவளியில் ஸ்வாமி தேஶிகனாலும், அநுக்ரஹிக்கப்பட்டிருக்கிறதென்றே அந்த ஸ்வாமிகள் நிர்வஹித்திருக்கிறார்கள். அதை நாம் அதிகமாக ஆக்ஷேபிக்கவில்லை. ஸ்த்ரீ தர்ம விஷயமாகவும் ஸ்ரீ மதுராந்தகம் ஸ்வாமி ஸாதிப்பது க்ராஹ்யமே. வைதிக மதஸ்தர்க ளெல்லாராலும் நிர்விவாதமாக ஒப்புக்கொள்ளப்பட்டும் பஹுகாலமாக எல்லாராலும் அநுஷ்டிக்கப்பட்டும் இருக்கிற நிர்ணயம் ப்ராமாணிகமாகவே இருக்கவேண்டு மென்பது நிராக்ஷேபம். ஆனால் வித்யா ஸ்தாநங்களுக்கு அதிகார ஸம்பாதகமான உபநயந ரூபமான ஸம்ஸ்காரம் ஸ்த்ரீகளுக்கு விவாஹத்தால் ஏற்படுகிறதென்று ஸ்மர்த்தாக்கள் சொல்லியிருக்கும் வார்த்தையானது, அவர்களுக்கு வித்யையில் ப்ரவேஶமில்லை யென்றால் நிரர்த்தகமாகிவிடாதோ வென்று ஒரு ஶங்கை மாத்ரம் நிற்கின்றது. நிற்க, மேல் உதாஹரிக்கப்படும் உபநிஷத் பாஷ்யம் இந்த விஷயத்தில் எவ்விதமான அபிப்ராயம் கொண்டிருக்கின்றது என்பதும் கவனிக்கத்தக்கது. ஶூத்ரர்களுக்குள்ள வித்யாநதிகாரம் அத்யயநாபாவத்தாலா? இல்லாவிட்டால் ப்ரதிஷேத பலத்தாலா? என்பதை விசாரிக்கும் ப்ரகரணத்தில் உபநிஷத் பாஷ்யகாரர் பின்வருமாறு அருளிச் செய்திருக்கிறார்.

"अन्यथा अध्ययनाभावेन शूद्राय विद्याप्रत्याख्याने मैत्रेयीप्रभृतीनां स्त्रीणां ब्रह्मविद्यावाप्तौ का गतिः ? नहि मैत्रेय्यादिशब्दानां पुरुषेषु वृत्तिः कल्पयितुं शक्या । तस्मात् प्रतिषेधबलादेव अनधिकारः"

ஸர்வ வ்யாக்யாந அதிகரணம். ஸ்த்ரீ தர்மம்.

Regd. No. M: 4437

[அத்யயந மில்லாமையினால் ஶூத்ரர்களுக்கு வித்யாநிஷேதம் செய்யும் பக்ஷத்தில் மைத்ரேயி முதலான ஸ்த்ரீகள் வித்யை அடைந்திருப்பதற்குக் கதி என்ன? மைத்ரேயி முதலிய ஶப்தங்கள் புமான்களைக் குறிக்கின்றன என்று சொல்வது ஸாத்யமன்று. ஆகையால் ப்ரதிஷேத பலத்தாலேயே அதிகாராபாவம் ஸித்திக்கவேண்டும்]. இதிலிருந்து ஸ்த்ரீகளுக்கு ஸமக்ராத்யயநம் இராமற்போனாலும் ஸமைத்ரேயீ முதலிய ஸ்த்ரீகளுக்கு வித்யா ப்ராப்தி இருந்ததாக ஏற்படுகிறபடியாலும், அவர்கள் விஷயத்தில் அநந்யதா ஸித்த ப்ரதிஷேத வாக்யங்கள் இல்லையாதலாலும், ஸ்த்ரீகளுக்கு வித்யையில் அதிகாரம் உண்டு என்று பூர்வாசார்யர்கள் திருவுள்ளம் பற்றியிருப்பார்களோ என்று நினைக்க ஹேது இருப்பதுபோலத் தோன்றுகிறது. இந்த விசாரம், பஹுகாலமாக நடைபெற்று வரும் அநுஷ்டாநத்தை மாற்றவேண்டும் என்னும் எண்ணத்துடன் செய்யப்படவில்லை; வஸ்து யாதாத்ம்ய ஜ்ஞாநத்தையே பலமாக எண்ணிச் செய்யப்பட்டது.

* * * *

ஸ்ரீ மதுராந்தகம் ஸம்ஸ்க்ருத பாடஶாலை

சென்ற ஆனி மீ 27உ (10—7—44) திங்கட் கிழமை திநம், ஸ்ரீ மதுராந்தகத்தில் நடைபெற்று வரும் ஸ்ரீ அஹோபில மடத்து ஸம்ஸ்க்ருத பாடஶாலை கோடை விராம காலம் கழித்துப் புதிய வர்ஷத்திய ப்ரவசநத்திற்குத் திறக்கப் பட்டது. ப்ரவசந கர்த்தாக்களும் வித்யார்த்திகளும் வந்திருந்தார்கள். யதாக்ரமம் ஸ்ரீ ஶரண்யனை ஸ்துதி செய்த பிறகு பாடங்கள் உபக்ர மிக்கப்பட்டன. அன்று மத்யாஹ்நாத் பரம் புதிதாகப் பாடஶாலையைச் சேரவேண்டி அவ்விடம் வந்திருந்த வித்யார்த்திகள் பரீக்ஷிக்கப்பட்டு, அவரவர்களுக்கு அநுரூபமான பாகத்திற் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள். இந்த ஸம்வத்ஸரத்தில் புதிய வித்யார்த்திகளுட்பட ஶாஸ்த்ர பாகத்தில் 58 பெயர்களும், வேத பாகத்தில் 13 பெயர்களும், ப்ரபந்த பாகத்தில் 7 பெயர்களும், ஆக மொத்தம் 78 பெயர்கள் படித்து வருகிறார்கள். இவர்களுள் 20 பெயர்கள் ஶிரோமணி பாகத்தைச் சேர்ந்தவர்கள். மொத்தம் 80 பெயர்களுக்குப் பாடசாலையில் ஸம்விதாநம் செய்யப்பட்டிருக்கிறபடியால், இன்னும் இரண்டு வித்யார்த்திகளைச் சேர்த்துக்கொள்வதற்கு அவகாஶம் இருக்கின்றது. ஶிரோமணி 3-வது பாகத்தில் வித்யார்த்திகள் குறைவாக இருக்கிறபடியால் அந்தப் பாகத்திற்கு அர்ஹர்களாக இருப்பவர்கள் யாராவது வந்தால் அவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். ஸ்ரீ அழகிய சிங்கரால் ஜகத்தின் ஶ்ரேயஸ்ஸை உத்தேசித்து மஹத்தான ஔதார்யத்துடன் நடத்தப்பட்டு வரும் இந்தப் பாடஶாலையை ஸ்ரீ லக்ஷ்மி ந்ருஸிம்ஹன் குளிரக் கடாக்ஷித்து அநுக்ரஹிக்க வேண்டுமென்று நாம் ஹார்த்தமாக ப்ரார்த்திக்கிறோம்.

ஸ்ரீ:

ஓர் விஜ்ஞாபநம்

2/10/28.

நாளது தாரண௵ புரட்டாசிமீ 5உ (20—9—44) முதல், 13உ (28—9—44) வரையில் திருப்பதித் திருமலையில் ஸ்ரீ திருவேங்கட முடையானுக்கு, ப்ரம்ஹோத்ஸவம் நடக்கப்போகிறது. அந்த ஸமயத்தில், எழுந்தருளும் வேதபாராயண அத்யாபக ஸ்வாமிகளுக்கும், இதர ஸ்ரீ வைஷ்ணவ ஸேவார்த்திகளுக்கும், வழக்கம்போல் இவ்வருஷமும் ஸ்ரீ அஹோபில மடத்தில் ஸ்ரீமத் அழகியசிங்கர் நியமநத்தை முன்னிட்டுத் ததீயாராதநம் நடத்த வேணுமாய் உத்தேசித்திருக்கிறது. அதற்கு ஆஸ்திகர்கள் த்ரவ்ய ஸஹாயம் செய்து ஷை கைங்கர்யத்தை இவ்வருஷமும் நன்றாய் நடந்தேறும்படி செய்ய வேணுமாய்ப் ப்ரார்த்திக்கிறேன். த்ரவ்ய ஸஹாயம் செய்யும் ஸ்வாமிகள் தமது தொகையை அடியிற் கண்ட விலாஸத்திற்கு அனுப்ப ப்ரார்த்திக்கிறேன்.

இஞ்சிமேடு சேட்லூர் வேதாந்தாச்சார்யர்.
ஆராதநம், ஸ்ரீ அஹோபில மடம், திருமலை, மேல் திருப்பதி.

[Printed by K. Satakopachariar, at the Liberty Press, 10, Linghi Chetty Street, G. T., Madras.
Edited & Published by S. Vasudevachariar, 5, Ramaswami Street, Tyagarayanagar, Madras.